

சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு 26.01.2026 அன்று வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பொன்னாடை வழங்கி வரவேற்றார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.1.2026) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பில் சென்னை, கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 417 கோடியே 07 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகரராஜா, கணபதி, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. எ.அருண் தம்புராஜ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர், மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் நாராயணசாமி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி ராஜகுமாரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில்

# ரூ. 417.07 கோடி மதிப்பில் குழந்தைகளுக்கு உயர் சிறப்பு மருத்துவமனை - ஆராய்ச்சி நிலையக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன.29-**

**சென்னை, கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.417.07 கோடி மதிப்பீட்டில் குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.1.2026) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பில் சென்னை, கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 417 கோடியே 07 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

2024-25-ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், தென் சென்னை பகுதிகளில் குழந்தைகளுக்கான உயர்தர சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் சேவைகளை வழங்குவதற்காக சென்னை, கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் அதிநவீன வசதிகள் கொண்ட குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஆராய்ச்சி மற்றும் தரமான மருத்துவக் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சென்னையைச் சேர்ந்த தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், தனக்குச் சொந்தமான உறுப்புக் கல்லூரி அல்லது மருத்துவமனை எதுவும் இல்லாததால், இம்மருத்துவமனையை நிறுவிட முன்வந்துள்ளது.

அதன்படி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பில் சென்னை, கிண்டி, கிங் நோய்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 6.5 ஏக்கர் நிலப்பரப்பில், தரைதளம் மற்றும் ஆறு தளங்களுடன் 4,63,544 சதுர அடி பரப்பளவில் 417 கோடியே 07 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், 750 படுக்கைகள் கொண்ட இந்த குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதன் மூலம், உயர்தர சிறப்புப் பிரிவு குழந்தை மருத்துவப் பராமரிப்புக்காக ஒரு தனித்துவமான வசதி உருவாக்கப்படும். இது நோயுற்ற குழந்தைகளுக்கு சிறப்புப் பிரிவு, குழந்தை மருத்துவப் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும், குழந்தை மருத்துவக் கல்விக்கு ஆதரவளிக்கவும், ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், மேலும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பை எளிதாக்கவும் உதவும். இது குழந்தை மருத்துவ சிறப்புப் பிரிவு சேவைகளில் ஒரு அதிசிறப்பு மையமாக (Centre of Excellence) செயல்படும்.

இச்சிறப்பு மருத்துவமனையின் தரைத்தளத்தில், அவசர சிகிச்சை பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, கதிரியக்க நோய் கண்டறிதல் பிரிவு, முதல் தளத்தில் குழந்தைகளுக்கான மருத்துவம் மற்றும் நாளமில்லா சுரப்பி வார்டு, நுரையீரல் சிகிச்சை வார்டு, தீவிர சிகிச்சை பிரிவு, டயாலிஸிஸ் வார்டு, இயக்குநர் அலுவலகம், இரண்டாம் தளத்தில் இருதய சிகிச்சை பிரிவு, நரம்பியல் சிகிச்சை பிரிவு, எலும்பியல் பிரிவு, இரத்தவியல் பிரிவு, சிறப்பு வார்டுகள், மூன்றாம் தளத்தில் இரைப்பை குடல் சிகிச்சை பிரிவு, சிறுநீரகவியல் பிரிவு, சிறப்பு வார்டுகள், தனி அறைகள், நான்காம் தளத்தில் நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவு, ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவு, ஆராய்ச்சி ஆய்வகம், சிறப்பு வார்டுகள், ஐந்தாம் தளத்தில் குழந்தைகள் அறுவை சிகிச்சை பிரிவு, நிர்வாக அலுவலகம், இரத்த வங்கி, கருத்தரங்கக்கூடம், மைய ஆய்வகம், மயக்க மருந்தியல் பிரிவு, ஆறாம் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்குகள், கேத் ஆய்வகம், அறுவை சிகிச்சைக்கு பிந்தைய வார்டு, அதிதீவிர சிகிச்சை பிரிவு, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகரராஜா, கணபதி, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. எ.அருண் தம்புராஜ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் நாராயணசாமி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி ராஜகுமாரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில்

# மதுரை கிழக்கு தொகுதியில் பிரமாண்ட சிறப்பு ஜல்லிக்கட்டு விழா!

## கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் நடைபெற்றது!









கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு மற்றும் வண்டியூர் பகுதியைச் சேர்ந்த ஜல்லிக்கட்டு காளைகள், மாடுபிடி வீரர்கள் பங்கேற்கும் வகையில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் பிரம்மாண்டமான சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டிகள் அலங்காநல்லூர் கீழக்கரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், அரசு அதிகாரிகள், பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள், மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.